# அலகு தேர்வு

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு------- கணக்குப்பதிவியல்

பாடம் - 6 - கூட்டாண்மைக் கணக்குகள் - அடிப்படைக் கருத்துகள்

காலம் : 75 நிமிடம் மதிப்பெண்கள் : 50

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $8 \times 1 = 8$

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :

1. கீழ்கண்டவற்றில் எது சரியானது?
   அ) சராசரி இலாபம் = உயர் இலாபம் - சாதாரண இலாபம்
   ஆ) சாதாரண இலாபம் = சராசரி இலாபம் - உயர் இலாபம்
   இ) உயர் இலாபம் = சாதாரண இலாபம் - சராசரி இலாபம்
   ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்
2. தொழிலில் பயன்படுத்தப்பட்ட சராசரி முதல் ₹. 50,000 ; முதல் மீது எதிர்பார்க்கும் வட்டி 12% எனில், சாதாரண இலாபத்தின் மதிப்பு ₹. ---------
   அ) ₹. 60,000 ஆ) ₹.6,000 இ) ₹. 6,600 ஈ) இவற்றில் ஏதும் இல்லை
3. உயர் இலாபத்தின் மதிப்பு ₹. 4,000 மற்றும் கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை மூன்று எனில், நற்பெயரின் மதிப்பு ₹. ----------
   அ) ₹. 8,000 ஆ) ₹.6,000 இ) ₹. 12,000 ஈ) இவற்றில் ஏதும் இல்லை
4. X , Y என்ற கூட்டாளிகள் 2 : 3 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்களின் முதல், முறையே ₹. 1,20,000 மற்றும் ₹. 60,000 ஆகும். அவ்வாண்டின் இலாபம் ₹. 9,000. கூட்டாண்மை உடன்பாடு முதல் மீது வட்டி பற்றி எதையும் குறிப்பிடாத பொழுது X , Y இருவருக்கும் கிடைக்கும் இலாபம் ----------
   அ) இலாபம் : X - ₹. 6,000 ; Y - ₹. 3,000 ஆ) இலாபம் : X - ₹. 3,600 ; Y - ₹. 5,400
   இ) இலாபம் : X - ₹. 3,000 ; Y - ₹. 6,000
5. ஒரு நிறுவனத்தில் A, B ஆகிய கூட்டாளிகளின் முதல் கணக்குகள் மற்றும் நடப்புக் கணக்குகள் பராமாரிக்கப்படுகின்றன. B கொண்டுவரும் கூடுதல் முதல் பதியப்படுவது --------
   அ) B-யின் நடப்புக் கணக்கு ஆ) B - யின் முதல் கணக்கு
   இ) B - யின் நடப்புக் கணக்கு அல்லது முதல் கணக்கு
6. கூட்டாண்மை நிறுவனத்தின் குறும எண்ணிக்கை --------
   அ) ஒன்று ஆ) இரண்டு இ) ஏழு ஈ) மூன்று
7. நிலை முதல் முறையில், கூட்டாளிகளின் இலாப, நட்டங்கள் அவர்களின் ----------- கணக்குகளுக்கு மாற்றப்படுகிறது.
   அ) நடப்பு ஆ) எடுப்பு இ) முதல் ஈ) இவற்றில் ஏதும் இல்லை



8. கூட்டாளிகளின் நடப்புக் கணக்குகள் தொடங்கப்படுவது -----------
   அ) நிலை முதல் முறையில் ஆ) மாறுபடும் முதல் முறையில்
   இ) நிலைமுதல் முறையிலோ அல்லது மாறுபடும் முதல் முறையிலோ

## பகுதி --- II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 9 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $5 \times 2 = 10$

9. எடுப்பு என்றால் என்ன?
10. நற்பெயர் என்றால் என்ன?
11. கூட்டாண்மை உடன்பாடு இல்லாதபொழுது, கீழ் காண்பவை நிறுவன ஏடுகளில் எவ்வாறு செயல்படுத்தப்படும்?
    அ) எடுப்பு மீது வட்டி ஆ) இலாபப் பகிர்வு விகிதம்
12. நற்பெயரின் மதிப்பினை கணக்கிடும் முறைகள் யாது?
13. நிறுவனத்தின் நற்பெயர் கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி இலாபத்தின் இரண்டு ஆண்டு கொள்முதல் என மதிப்பிடப்படுகிறது.மூன்று ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹. 15,000 ; ₹. 7,000 ; ₹. 8,000. நற்பெயரின் மதிப்பைக் காண்க.
14. சுரேஷ், நரேஷ் எனும் இரு கூட்டாளிகள் சமமாக இலாப நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். சுரேஷ் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாத இறுதியிலும் ₹. 1,000 எடுத்துக் கொள்கிறார். ஆண்டுக்கு 10 % எடுப்புகள் மீதான வட்டியைக் கணக்கிடுக.

## பகுதி --- III

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 15 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $4 \times 3 = 12$

15. உயர் இலாபம் என்றால் என்ன?
16. கூட்டாண்மை - வரைவிலக்கணம் தருக.
17. 1.4.2004 அன்று மஞ்சுளா, வெண்ணிலா ஆகியோர் முதல் முறையே ₹. 60,000, ₹. 40,000 முதலிட்டு தொழில் தொடங்கினர். 1.7.2004 அன்று மஞ்சுளா ₹. 8,000 முதலிலிருந்து திரும்ப எடுத்துக்கொண்டார். 30.9.2004 அன்று வெண்ணிலா ₹. 10,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். 2005 மார்ச் 31ஆம் நாளுடன் முடியும் ஆண்டின் முதல் மீதான வட்டி 5 % கணக்கிடுக.
18. பானு, ரேணு என்ற இருவரும் கூட்டாளிகள். பானு 2017ஆம் ஆண்டில் ஒவ்வொருமாத இடையிலும் தொடர்ந்து ₹. 500 எடுத்துக்கொள்கிறார். ரேணு ஒவ்வொருஅரையாண்டு இறுதியிலும் ₹. 1,200 எடுத்துக் கொள்கிறார். ஆண்டுக்கு 5 % எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடுக.
19. ஒரு நிறுவனத்தின் ஆண்டுதோறும் எதிர்பார்க்கும் சராசரி இலாபம் ₹. 30,000. தொழிலில் பயன்படுத்தப்பட்டுள்ள சராசரி முதல் ₹. 1,00,000.



http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

www.Padasalai.Net

www.TrbTnpsc.com

தொழிலில் போட்டுள்ள முதல் மீது எதிர்பார்க்கும் வட்டி 10 % உயர் இலாபத்தின் இரண்டு ஆண்டு கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக.

## பகுதி --- IV

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். 4 × 5 = 20

20. ஒரு நிறுவனம் கடந்த மூன்று ஆண்டுகளின் நிகர இலாபங்கள் முறையே, முதல் ஆண்டு ₹. 35,000; இரண்டாம் ஆண்டு ₹.40,000 ; மூன்றாம் ஆண்டு₹.45,000. நிறுவனத்தின் பயன்படுத்தப்பட்ட முதல் ₹. 2,00,000. நியாயமான முதல் மீதான வருமானம் 10 % உயர் இலாபத்தின் மூன்று ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு நற்பெயரைக் கணக்கிடுக.

( அல்லது)

G, P, S எனும் கூட்டாளிகள் 3 : 2 : 1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். G என்பவரின் விலகலின் பொழுது, நற்பெயர் கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் இரண்டு ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு மதிப்பிடப்படுகிறது. முதலாண்டு நட்டம் ₹. 6,000 ; இரண்டாம் ஆண்டு இலாபம் ₹. 10,000 ; மூன்றாம் ஆண்டு இலாபம் ₹. 17,000 ; நான்காம் ஆண்டு இலாபம் ₹. 15,000. உரிய குறிப்பேட்டுப் பதிவு தருக.

21. நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

( அல்லது )

நற்பெயரைப் பாதிக்கும் காரணிகள் யாவை?

22. அமுதன், இராமன் எனும் கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வந்தனர். 1.4.2017 அன்றைய அவர்களுடைய முதல் முறையே ₹. 1,60,000, ₹. 1,20.000 ஆகும். கூட்டாண்மை ஒப்பாவணம் கீழ்க்காண்பனவற்றிற்கு வகை செய்கிறது. சரிக்கட்டுதல்களுக்கு முன் 2018 மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர இலாபம் ரூ.60,000. அந்த ஆண்டின் எடுப்புகள் முறையே அமுதன் ₹. 12,000, இராமன் ₹. 8,000 ஆகும்.

1. முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5%
2. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6%
3. அமுதன், இராமன் இருவரும் முறையே ₹.10,000 ஊதியம் பெறுகின்றனர்.
4. அமுதன் கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 10 % கழிவு பெறுகிறார்.

இலாப நட்டப் பகிர்வு கணக்கையும், கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும் தயார் செய்க.



( அல்லது )

2017 ஏப்ரல் 1 ஆம் நாள் பாபு , கோபு எனும் கூட்டாளிகள் இருவர் முறையே ₹. 40,000 மற்றும் ₹. 30,000 முதலிட்டு சமமான விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். சரிக்கட்டுதலுக்கு முன் நிகர இலாபம் ₹.1,50,000. முதல் மீது வட்டி 6 %. பாபு ஊதியம் ₹.15,000. பெறுகிறார். எடுப்புகள் முறையே பாபு ₹.40,000, கோபு ₹. 30,000. எடுப்புகள் மீதான வட்டி முறையே பாபு ₹.2,000; கோபு ₹.1,500. கோபு ₹.9,650 கழிவு பெறுகிறார். 2018 மார்ச் 31 அன்று உள்ளபடி கூட்டாளிகளின் இலாப நட்ட பகிர்வு கணக்கையும் மாறுபடும் முதல் கணக்குகளையும் தயாரிக்க.

23. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு ரவி, ராஜா எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும், நடப்புக் கணக்குகளையும் தயார் செய்க.

| | ரவி ₹ | ராஜா ₹ |
|---|---|---|
| 1-04-2003 அன்றைய முதல் | 1,00,000 | 60,000 |
| 1-04-2003 அன்றைய நடப்புக் கணக்கு | 3,000 ( ப ) | 2,000 ( வ ) |
| 2003 - 2004 ஆம் ஆண்டின் எடுப்புகள் | 8,000 | 5,000 |
| முதல் மீது வட்டி | 5,000 | 3,000 |
| எடுப்பு மீது வட்டி | 240 | 150 |
| 2003-2004 ஆம் ஆண்டின் இலாபப் பங்கு | 12,000 | 10,000 |
| கழிவு பெற்றது | 1,200 | 1,000 |
| கூட்டாளியின் ஊதியம் | 4,000 | —— |

( அல்லது )

X , Y என்ற இரு கூட்டாளிகளின் சமமாக இலாப நட்டத்தைப் பகிர்ந்துகொண்டு தொழில் புரிகின்றனர். X என்பவருக்கு மாத ஊதியமாக ₹.5,000 வழங்கவும்,Y என்பவருக்கு கழிவுக்கு பின் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவு வழங்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஊதியம் மற்றும் கழிவுக்கு முன் நிகர இலாபம் ₹.1,48,000. இலாப நட்டப் பகிர்வுக் கணக்கைத் தயாரிக்கவும்.



http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html